Tamil

# Public Libraries

**உங்களது பொது நூலகம் உங்களை வரவேற்கிறது!**

நியூ சவுத் வேல்ஸில் உள்ள பொது நூலகங்கள் இலவசமானவை.

வந்திடுவீர், தேடிக் கண்டிடுவீர்:

- கலை, விளையாட்டு, இசை, அறிவியல் மற்றும் பல துறைகளில் நூல்கள்
- நாவல்கள், வீரதீரச் செயல் கதைகள் போன்ற மனமகிழ்ச்சிக்காகப் படிக்கும் நூல்கள்
- வார இதழ்கள், செய்திப் பத்திரிகைகள், ஒளிவட்டுகள், குறுந்தகடுகள்
- குழந்தைகளுக்கான நூல்கள்
- ஆங்கிலம் கற்பதற்கான நூல்கள் மற்றும் இதர சாதனங்கள்
- இணைய இணைப்பு
- பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆங்கிலம் அல்லாத மொழிகளில் நூல்கள்
- கற்பதற்கு அல்லது வெறுமனே அமர்ந்து படிப்பதற்கு இடங்கள்

நியூ சவுத் வேல்ஸ் மாநில நூலகங்களிலிருந்து அனைத்து பொது நூலகங்கள் வழியாக நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் நூல்கள் கிடைக்கும், உங்கள் நூலக அலமாரியில் உங்கள் மொழியில் நூல்கள் இல்லாமல் போனால், மாநில நூலகத்திலிருந்து சிலவற்றை உங்களுக்குப் பெற்றுத் தருமாறு நூலகரைக் கேளுங்கள்.

**இது ஓர் இலவச சேவை**

உங்கள் உள்ளூர் நூலகத்தில் உங்களுக்கு மேலும் கிடைக்கக் கூடியவை:

- உங்கள் மொழியில் பேசாவிட்டாலும், உங்களுக்கு உதவிபுரிவதற்கு ஆட்கள்
- எல்லா வயதினருக்கும் ஏற்ற பல்வகையான சேவைகளும் மற்றும் செயல்பாடுகளும் .

**திறந்திருக்கும்** நேரங்கள் வாரநாட்களில் காலையிலும் மாலையிலும் மற்றும் வார இறுதியிலும் நூலகத்துக்கு நூலகம் மாறுபடும்.

**சேர்வது எளிது.** நீங்கள் எங்கே வசிக்கிறீர்களோ அல்லது வேலைபார்க்கிறீர்களோ அதற்கு அருகிலிருக்கும் நூலகத்துக்கு நீங்கள் சென்று உங்களது பெயர் மற்றும் தற்போதைய முகவரி அடங்கிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லவும். குழந்தைகள் சேருவதற்கு அவர்களின் பெற்றோரின் கையொப்பம் பொதுவாகத் தேவைப்படும்.

**பொது நூலகங்கள் நீங்கள், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் உரித்தானவை.**

நியூ சவுத் வேல்ஸ் மாநில நூலகத்தினால் தயாரிக்கப்பட்டது
www.sl.nsw.gov.au 2009